[1967 ஜூன் 23

மு.ப. 10-00 DR. H. V. HANDE: What is the arrangement for the disposal of the sewage water?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, புதிதாக எத்தனை நகரங்களில் சாக்கடைத் திட்டம் அமைப்பதாக இந்த அரசு கருதியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவையில் பஞ்சாலைகள் மூடப்பட்டதும், தொழிலாளர் பிரச்சினையும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அவையின் அலுவலை ஒத்திவைப்பதற்கு அனுமதி கோரி, திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை இப்பொழுது படிப்பார்கள்.

***திரு. கே. என். குமாரசாமி** : தலைவர் அவர்களே, அவசரமானதும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததும், நியாயமானதுமான அடியிற்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று இதன் மூலம் அறிவிப்புக் கொடுக்கிறேன்.

"கோவை மாவட்டத்தில் அண்மையில் மில்கள் மூடப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டுள்ள 10,000 தொழிலாளரைத் தவிர, மேலும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகியுள்ளதை விவாதிக்க ஒத்தி வைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேற்றப்படும் வரையில் தனி உறுப்பினர்களின் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள நடைமுறையில் இடம் இல்லை என்பதை, ஏற்கெனவே திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது 20—6—1967-லும், திரு. சுப்பராஜா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது 22—6—1967-லும் தீர்ப்பு அளிக்கிறபோது, விரிவாக விளக்கப்படுத்தியிருக்கிறேன். அரசினருக்கு நிதி ஒதுக்குகின்ற வரையில், பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்கும் தீர்மானங்கள் கொண்டுவரக் கூடாது என்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. பேரவை, நிதியைக் கொடுத்தால்தான்,

[பேரவைத் தலைவர்]

அரசு நடைபெற முடியும். அரசினருக்குப் பணம் கொடுப்பதற்கான உரிமை பேரவைக்கு மட்டுமே இருக்கிறது. தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இப் பேரவை, நிதி ஒதுக்கிக் கொடுக்கவில்லையென்றால், அரசினரின் ஊழியர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாது.

எனவேதான், நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேற்றப்படும் வரை, பேரவை தங்குதடையின்றி நடைபெற வேண்டும் என்பதற்காக, பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க வேண்டுமென்ற தீர்மானம் அனுமதிக்கப்படுவதற்கில்லை. எனவே, பேரவைத் தலைமையுடன், இதில் ஒத்துழைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. குமாரசாமி அவர்கள் கோரிய அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அறிவிப்பு ஒன்று உள்ளது. 22-6-67-ல் கூடிய அலுவல் ஆய்வுக்குழு 1967-68-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பதற்காக, உறுப்பினர்கள் எல்லோரும் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளபடி 28-6-67-லிருந்து, 15-7-67-வரை நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்திருக்கிறது என்பதை அறிவிக்கிறேன்.

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதியைக் கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: மசோதாவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

• 562—563-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது